**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous — STC.No. 305 of 2016
Priliminary Register
Sessions

Depostitions of Prosecution witness for — Prosecutuion PW7 / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | சங்கர் (தலைமை காவலர்) |
| Father name | : | குருநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | PW7 (LW3 ) |
| Religion | : | |
| Age | : | 41 |

**1** வது எதிரி ஆஜரில்லை**. 2, 4** எதிரிகள் ஆஜர்**. 3** வது எதிரி இறப்பு**. 1** வது எதிரி தரப்பில் பிரிவு **355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.** அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர். **1, 2, 4** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 26th day of February 2026

**முதல் விசாரணை**

நான் தற்போது நெய்வேலி தெர்மல் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு கடந்த 2015 சோழத்தரம் காவல்நிலையத்தில் காவலராக பணியில் இருந்தேன். 24.09.2015 ம் தேதி மதியம் 2 மணியளவில் நானும் என்னுடன் ரமேஷ் முதல் நிலைக் காவலர் என்பவரும், சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் ஆகியோரும் பாளையங்கோட்டை வசந்தம் மண்டபத்தில் பிரச்சனை என கேள்விப்பட்டு சென்றோம். அப்போது மண்டபத்திற்கு சென்றபோது கூட்டமாக வாய்தகராறு செய்து கொண்டிருந்தனர். நாங்கள் சத்தம் போடவேண்டாம் என்று சொல்லி கலைந்து போக

சொன்னோம். அப்போது அங்கிருந்த எதிரி பிரேம், பாண்டியன், அம்புரோஸ், அடைக்கலம் ஆகியோர் இது எங்கள் மண்டபம், நீங்கள் யார் எங்களை கேட்பது என்றும் எங்கள் ஊருக்கு எதுக்கு வருகிறீர்கள் என்றும், அதன் பின்பு வக்காலஒழி, முட்டாள்பசங்களா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். பின்பு நாங்கள் கலைந்து போக சொன்னோம் அதற்கு நீங்கள் யார் இங்கு வருவதற்கு என்று கேட்டனர். இது எங்கள் ஊர் எங்கள் மண்டபம் என்றும் எங்களுக்கு ஏதாவது என்றால் நாங்களே பார்த்துக் கொள்வோம் என்றும், நாங்கள் சொன்னதை மதிக்காமல் எங்களை வேலை செய்யவிடாமல் எங்களிடம் வைத்துக் கொண்டால் எங்களை அடித்துக் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதன்பின்பு அங்கு எதுவும் பேசிக்கொள்ளாமல் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் சோழத்தரம் காவல்நிலையம் வந்து புகார் அளித்தார். அந்த புகாரில் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மண்டபத்தில் பிரச்சனை என்று எவ்வாறு தகவல் வந்தது என்றால் நிலைய அலைப்பேசி எண்ணுக்கு போன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. எத்தனை மணிக்கு மண்டபத்திற்கு சென்றோம் என்றால் 2.15 மணிக்கு சென்றோம். வழக்கு சம்பவம் எங்கு நடந்தது என்றால் மண்டபத்தின் ஹாலில் நடந்தது. அவ்வாறு சென்று பார்த்தபோது எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 15, 20 நபர்கள் இருந்தனர். அன்று மண்டபத்தில் நிகழ்ச்சி எதுவும் இருந்ததா என்றால் திருமண நிகழ்வு இருந்தது. அந்த திருமண நிகழ்வு யார் தொடர்புடையது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்திற்கு வந்த உறவினர்கள் அங்கு வந்திருப்பார்கள் என்றால் நினைவு இல்லை.

நாங்கள் சென்று பார்த்தபோது பிரச்சனை நடந்ததாக தெரிவித்துள்ள நிலையில் யார்யாருக்கிடையே பிரச்சனை நடந்து கொண்டிருந்தது என்றால் அது நினைவு இல்லை. சம்பவ இடத்தில் நாங்கள் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் அரை மணி நேரம் இருந்திருப்போம். எங்களுக்கு தகராறு நடப்பதாக புகார் அளித்த நபர் எங்களிடமோ சிறப்பு உதவி ஆய்வாளரிடமோ புகார் எதுவும் அளித்தாரா என்றால் இல்லை. தகவல் கிடைத்து ஒரு இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால் காவல்நிலைய பதிவேட்டில் குறிப்பு செய்து கொண்டால் செல்வோம் என்றால் உதவி ஆய்வாளர் பதிவு செய்வார். சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பவயிடம் செல்வதற்கு முன்பு விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளரிடம் தகவல் சொல்லிவிட்டு சென்றாரா என்றால் தகவல் சொன்னார்.

நாங்கள் அரைமணி நேரம் சம்பவயிடத்தில் இருந்ததாக கூறும் நிலையில் பிரச்சனையை சரிசெய்துவிட்டு தான் அங்கிருந்து புறப்பட்டோமா என்றால் இல்லை. அவர்கள் நாங்கள் சொல்வதை கேட்கவில்லை. அதனால் புறப்பட்டுவிட்டோம். அந்த இடத்தில் பிரச்சனை செய்த நபர்களை நாங்களோ சிறப்பு உதவி ஆய்வாளரோ கைது செய்ய முயற்சித்தோமா என்றால் இல்லை. அங்கிருந்து நேராக காவல்நிலையம் வந்து உடனடியாக புகார் கொடுக்கப்பட்டதா என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் 3.15 மணிக்கு புகார் அளித்தார்.

இது தொடர்பாக உதவி ஆய்வாளர் எப்போது எங்கு வைத்து விசாரித்தார் என்றால் 5 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார். அவ்வாறு விசாரித்தபோது என்னை எந்தெந்த நபர் என்னென்ன வார்த்தைகள் சொல்லி திட்டினார்கள் என தெரிவித்தேனா என்றால் தற்போது நினைவு இல்லை. சம்பவயிடத்தில் வீடியோ பதிவுகள் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எங்கள் சிறப்பு உதவி ஆய்வாளர் பொய்யாக அளித்த புகாருக்கு அனுசரனையாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை

Sinature of witness